

# புதுமையான வியாபார ஐடியாக்கள்

INNOVATIVE BUSINESS IDEAS



கட்டுரையாளர்
K. T. ராஜன், சேர்மன் EPC, மதுரை

**புதுமையான வியாபார ஐடியா தான் ஒரு ஸ்டார்ட் அப் தொழிலுக்கு அடிப்படையான தேவைகளில் ஒன்றாக இருக்கிறது. நுகர்வோருக்கு ஏற்படும் சிறு தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் ஒரு புதிய தீர்வு காணும் போது, பல ஸ்டார்ட் அப் ஐடியாக்கள் உருவாகிறது.**

முதலில் ஐடியா வலுவானதாக இருக்க வேண்டும். அந்த ஐடியா மக்களின் பிரச்சினைகளை / தேவைகளை தீர்த்து வைக்கும் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவையாகவும் இருக்கலாம். உங்கள் சேவை அல்லது தயாரிப்பு மற்றவற்றிலிருந்து எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது? அது எந்த அளவுக்கு பிரச்சனைகளை / தேவைகளை, எந்தவிதத்தில தீர்க்கும் என்பதை பொறுத்தே ஸ்டார்ட் அப் ஐடியா வெற்றி அடையும்.

மேலும் ஐடியா என்றால் புதுமையானதாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் சேவைகள்




மற்றும் உள்கட்டமைப்பை எப்படி புதுமையான சிந்தனை மூலம் மேம்படுத்துவது என்பதும் ஐடியா தான். இப்படி மாற்றி யோசித்தாலே பல ஸ்டார்ட் அப் தொழில்களை உருவாக்கலாம்.

புதிய ஐடியாவின் தனித்தன்மையும், மார்க்கெட்டில் அதன் தாக்கமும் தான் நிறுவனத்தின் மதிப்பையும் வெற்றியையும் தீர்மானிக்கின்றன. புதுமையான தொழில் முயற்சியால் கவரப்படுகிறார்கள் என்பது தான் வெற்றிக்கான முதல் அறிகுறி.

## உணவு – Food

மனிதனுக்கு உணவு என்பது மிகவும் அடைப்படை தேவைகளில் ஒன்று, விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழில்கள், மனிதனின் வரலாறோடு பின்னிப் பிணைந்தது. முதலில் வீட்டில் சமைத்து சாப்பிட்டு உண்ணும் பழக்கம் இருந்தது. அப்போது உணவை ஆர்டர் செய்து சாப்பிடும் பழக்கம் இல்லை. பின்னர் காலப்போக்கில், நேரம் பற்றாக்குறையால் உணவு தேவைக்காக ஹோட்டலுக்கு செல்லும் பழக்கம் காலப்போக்கில் மாறின. இன்று ஸ்விக்கி (Swiggy), ஜோமோட்டா (Zomato) போன்ற நிறுவனங்கள் உணவை வீட்டிற்கே கொண்டு டெலிவரி செய்யும் முறையும் வந்ததும் ஸ்டார்ட் அப் ஐடியா தான்.

## உடை - Textile

தமிழர்கள் பண்டைக் காலம் முதற்கொண்டு பருத்தி, பட்டு, கம்பளி ஆடைகளை அணிந்து வருகின்றனர். காலத்தின் பரிணாமத்தின் படி ஆடைகளின் உற்பத்தியும், வளர்ச்சியும் கூடி வருகிறது. மக்களின் தேவைகேற்ப இன்று இந்தத்

துறை பெரிய வளர்ச்சி பெற்று வருகிறது. கடைகளுக்கே சென்று ஆடை வாங்கியது மாறி இன்று ஆன்லைன் மூலமாக ஆர்டர் செய்யும் முறை வந்ததும் ஸ்டார்ட் அப் ஐடியா தான். இந்த வகையில் பல நூறு கம்பெனிகள் இருக்கின்றன.

## இருப்பிடம் - Home

ஒரு மனிதன் தங்குவதற்கு வீடு இன்றியமையாதது. ஆரம்ப காலங்களில் குடிசை வீட்டில் தங்கி இருந்த மக்கள், காலப் போக்கில் ஓட்டு வீட்டிற்கு மாறினர். காலத்திற்கேற்ப ஓட்டு வீடுகள் கட்டடங்களாகவும் அடுக்கு மாடி குடியிருப்புகளாகவும் மாறியது மட்டும் இல்லாமல் இன்று ரியல் எஸ்டேட் பிசினஸ் மிகவும் பிரபலம் அடைந்து வருகிறது. இதனால் கட்டுமான பொருள்களின் தேவைகளைப் பொறுத்து பல பெரிய தொழிற்சாலைகள் தோன்ற காரணமாகவும் அமைகிறது. நாம் பயணிக்கும் போது தங்குவதற்கு இன்று ஆன்லைனில் பதிவு செய்ய ஓயோ (Oyo), கோஐபிபோ (Coibibo) போன்ற நிறுவனங்கள் வந்ததும் ஸ்டார்ட் அப் ஐடியா தான்.

## பயணம் - Travel

உங்கள் ஐடியா சிம்பிள் (Simple) ஆகவும், புதுமையாகவும், தனித்துவமாகவும் இருந்தால் இன்னும் நல்லது. அதே சமயம் யாராலும் சுலபமாக காப்பி (Copy) அடிக்க முடியாமலும் இருந்தால் இன்னும் சிறப்பு. ‘ஊருக்கு போக ஏஜெண்ட்களிடம் நேராக சென்று, பேருந்து, புகைவண்டி, விமானம் டிக்கெட் கிடைக்கல’ என்று பலர் புலம்புவதை எத்தனை முறை கேட்டிருப்போம். அப்பிரச்சினையை ஆன்லைன் டிக்கெட் புக்கிங் மூலம் தவிர்க்கப்பட்டது. இதற்கு ரெட் பஸ் (Redbus), மேக் மை ட்ரிப் (Makemytrip), யாத்ரா (Yatra), டிக்கெட் கூஸ் (Ticket Goose) போன்ற நிறுவனங்கள் தோன்ற காரணமாக இருந்தது. புதுமையான ஸ்டார்ட் அப் ஐடியா தானே! இதனால் இணையதள தொழில்நுட்ப சார்ந்த வேலை வாய்ப்புகளும் உருவாகியது.

அதே மாதிரி டாக்ஸியை மக்கள் பல காலமாக பயன்படுத்தி வந்தாலும், டாக்ஸி சேவையை நம் மொபைலுக்கே கொண்டு வந்தன ஓலா (Ola), உபேர் (Uber), ஃபாஸ்ட்ராக் (Fastrack) போன்ற நிறுவனங்கள் சுலபமாக மொபைல் புக் செய்வதும் தொழிலின் பரிணாம வளர்ச்சியே.

## பிரச்சினைகளில் வாய்ப்பு – Opportunity in Problems

ஒரு கொசு கடிப்பது பிரச்சினையாக பார்ப்பதை தாண்டி தொழில் வாய்ப்பாக காண்பவர்கள் தான் கொசுவர்த்தியை கண்டு பிடித்தனர், பிறகு கொசு லிகுடேட்டர் (Liquidator), கிரீம் (Cream), கொசு

பேட் (Mosquito Bat), கொசு வலை (Mosquito Net) இப்படி எண்ணற்ற தொழில் வாய்ப்புகள் உருவாகியது.

### கழிவு மறுசுழற்சி – Waste Recycling

இன்று உலகை மிரட்டிக்கொண்டிருக்கும் பிரச்சினைகளில் ஒன்று, அதிகரிக்கும் கழிவுகள். நாள் தோறும் பெருகி வரும் ஏராளமான மின் சாதனப் பொருள்கள், பேட்டரிகள், பிளாஸ்டிக் கழிவுகள் போன்றவைகளை புதுமையான ஐடியாவால் மறு சுழற்சி செய்து, கழிவு சுத்தம் செய்வதுடன் புதிய பொருள்களை உருவாக்கவும் முடிகிறது. கழிவு மறுசுழற்சியால், உலக நலம் மற்றும் சுற்று சூழலுக்கும் பாதுகாப்பாக இருக்க உதவுகிறது.

எந்த ஒரு தொழிலும் மனித சமுதாயத்தின் தேவைகளை சார்ந்தே இருக்க வேண்டும். மனிதர்களின் தேவைகளை பூர்த்தி செய்யாத எந்த ஒரு புதிய தொழிலும் பெரிதாக வெற்றி அடைவதில்லை.

தொழிலில் ரிஸ்க் (Risk) எடுக்கும் மனோபாவம் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

மேலும் இது போன்று ஸ்டார்ட்அப் ஐடியா பற்றி தெரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டஇணைய தளங்களின் மூலமாகவும் காணலாம்.

**Startup and Business News**
**ஸ்டார்ட்அப் அண்ட் பிசினஸ் நியூஸ்**

https://www.startupandbusinessnews.com

https://www.businessnewsdaily.com/2747-great-business-ideas.html

https://myinvestmentideas.com/2012/11/20-good-small-business-ideas-with-low-investment/

https://www.businessknowhow.com/startup/200ideas.html

